***ஐயம் :*** மனிதர்களை அடிமைகளாக வைத்துக்கொண்டு கடுமையாக வேலை வாங்கி வருகிறார்களே முஸ்லிம்கள் இது சரியா? இப்படி வைத்துக் கொள்ள முஸ்லிம்களுக்கு குர்ஆன் அனுமதி கொடுத்திருப்பதும் தவறு தானே? அடிமை முறை சரியானதல்ல என்று தெரிந்தும் இதை அனுமதித்துக் கொண்டிருக்கிறார்களே இது சரியா? I. அஜ்முல்லா, காரைக்கால்

***தெளிவு :*** முஸ்லிம்கள் அடிமைகளைப் பணிக்கு அமர்த்திக் கொண்டிருப்பதாக கூறும் தங்களின் குற்றச்சாட்டு ஆதாரமற்றது. உலகில் எங்கேனும் அப்படிப்பட்ட ஒரு முஸ்லிமையாவது தங்களால் காட்ட முடியுமா? அடிமைகளை வைத்துக்கொள்ள குர்ஆன் அனுமதித்திருப்பதாகத் தாங்கள் கூறும் குற்றச்சாட்டும் தவறானது. அடிமைகளை வைத்துக் கொண்டு அவர்கள்மீது கடுமையான வேலைப் பளுவை சுமத்தித் துன்புறுத்தி வந்த பழக்கம் காலம் காலமாக இருந்து வந்த ஒன்று. அல்லாஹ்வின் இறுதித் தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் நபியாக அனுப்பப்பட்டபின், இந்த முறையை மெல்ல மெல்ல ஒழித்தார்கள். ஆண்டாண்டுகளாக வேதனைப்பட்டுக் கொண்டிருந்த அடிமைகள் நபியின் வருகைக்குப் பிறகு சுதந்திரக் காற்றை சுவாசித்து இன்பம் கண்டார்கள். அது மட்டுமல்லாமல் அடிமைகள் சரிநிகர் சமானமாக நடத்தப்பட்டார்கள். அடிமைகளுக்கு உயர் பதவிகள் இஸ்லாமிய ஆட்சி காலத்தில் வழங்கப்பட்டது.

அடிமை முறயை ஒழிப்பதற்கு குர்ஆன் நளினமான வழிகளை மேற்கொண்டிருக்கின்றது. அல்குர்ஆன் 2:177 வசனத்தைப் பாருங்கள் :

> **“நன்மை என்பது (இறை வணக்கத்திற்காக) உங்கள் முகங்களைக் கிழக்கிலோ, மேற்கிலோ திருப்பிக் கொள்வதில் (மட்டும்) இல்லை..... தன் பொருளை இறைவன்மீதுள்ள நேசத்தின் காரணமாக பந்துக்களுக்கும், அநாதைகளுக் கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்பவர்களுக்கும், அடிமைகளை (விடுதலைப் பத்திரத் தொகையைக் கொடுத்து) மீட்பதற்காகவும், (சிரமத்திலிருக் கும்) கடனாளிக்கும் உதவுவதற்காகவும் செலவு செய்தளீம் நன்மைகளாகும்.....””**
>
> **“உங்களில் எவரேனும் தவறாகக் கொலை செய்து விட்டால், அதற்குப் பரிகாரமாக முஃமினான ஓர் அடிமையை விடுதலை செய்யவேண்டும்......”** ***அல்குர்ஆன் 4:92***
>
> **“(வலிய வந்து உங்களுடன் போரிட வரும்) நிராகரிப்பவர்களை நீங்கள் போரில் சந்தித்தால், அவர்களுடைய கழுத்துக்களை வெட்டுங்கள். கடும் போர் செய்து (அவர்களை வென்று) விட்டால், பலமாக அவர்களைக் கட்டுங்கள் (இவ்வாறாகப் பிடிபட்ட கைதிகளை) அதன் பிறகு யாதொரு ஈடு பெற்றோ அல்லது (எதுவும் பெறாமல் கூட) உபகாரமாகவோ அவர்களை விட்டு விடுங்கள்....”** ***அல்குர்ஆன் 47:4***
>
> **“.... ஏதாவது ஒன்றை உறுதிப்படுத்தச் செய்யும் சத்தியங்களில் (தவறினால்) உங்களை அல்லாஹ் பிடிப்பான் (சத்தியத்தை முறித்தால்) அதற்குரிய பரிகாரமாவது 1.உங்கள்**

**குடும்பத்தினருக்கு நீங்கள் கொடுக்கும் ஆகாரத்தைப் போன்று நடுத்தர மானதைக் கொண்டு 10 ஏழைகளுக்கு உணவளியுங்கள். 2. அல்லது அவர்களுக்கு ஆடை அணிவிக்க வேண்டும். 3. அல்லது ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். 4. ஆனால் (இதில் எதையும்) ஒருவர் பெற்றிராவிட்டால் 3 நாட்கள் நோன்பு நோற்க வேண்டும்......"** ***அல்குர்ஆன் 5:89***

**"மேலும் எவர் தம் மனைவியரைத் தாய் எனக் கூறியபின் (வருந்தி) தாம் கூறியதை விட்டும் திரும்பி (மீண்டும் தாம்பத்திய வாழ்வை நாடி)னால், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னால், ஓர் அடிமையை விடுவிக்க வேண்டும். அதனைக் கொண்டே நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள்......"** ***அல்குர்ஆன் 58:3***

**"அடிமையைப் பெறாதவர்கள், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன் 2 மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும். இதற்குச் சக்தி பெறாதவர் 60 ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்....."** ***அல்குர்ஆன் 58:4***

நபி(ஸல்) அவர்களை நபியாக அல்லாஹ் தேர்ந்தெடுக்கும் முன்பாக மக்களிடம் பழக்கத்திலிருந்து வந்த இந்த அடிமை முறையை ஒழிப்பதற்காக, அல்லாஹு(ஜல்) மக்களை உற்சாகப்படுத்துகின்றான். எந்த அளவிற்கென்றால், அல்லாஹ்வின் பார்வையில் பாவமான காரியங்களாகக் கருதப்படுபவைகளுக்குப் பரிகாரமாக அடிமைகளை விடுதலைச் செய்யும்படி தூண்டுகிறான்.

**ரமழான் நோன்புடைய பகல் நேரத்தில் தன்னுடைய மனைவியுடன் உடலுறவு கொண்டு விட்டதாகக் கூறிய ஒரு மனிதரிடம், அக்காரியத்திற்குப் பரிகாரமாக ஒரு அடிமையை விடுதலை செய்யுமாறு நபி(ஸல்) அவர்கள் உபதேசிக்கிறார்கள்.** (ஹதீஸின் சுருக்கம்) ***அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரழி), நூல்கள் : புகாரீ, முஸ்லிம், அபூதாவூது, திர்மிதி***

இவ்வாறான விஷயங்களை அடுக்கிக் கொண்டிருப்பதற்கு குர்ஆனிலும், நபிமொழிகளிலும் கணக்கிலடங்காத ஆதாரங்கள் இருக்கின்றன. இவ்வாறாக, நபி(ஸல்) அவர்களுடைய ஜீவித காலத்திலேயே அடிமை முறை கணிசமாக ஒழிக்கப்பட்டு நாளடைவில் காணமற் போய் விட்டது.

ஆனால் தாங்களோ இஸ்லாம் அதை அனுமதித்துக் கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டியிருப்பது வருத்தத்திற்குரியது. தயவு செய்து பிறரது பேச்சுக்களைக் கேட்காமல், முஸ்லிமாக இருக்கக்கூடிய தாங்கள் திருகுர்ஆனை தாய்மொழியில் படித்து விவரங்களைத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

2005 அந்நஜாத்